# அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில், இருக்கண்குடி.
# சாத்தூர்வட்டம், விருதுநகர் மாவட்டம்.

-----

ந.க.எண். 292/18 அ4 நாள் : 10.07.2018

<u>பசலி 1428ன் உரிம இனங்கள் குறுகிய கால மறு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு அறிவிப்பு (மூன்றாம் அழைப்பு)</u>

கீழ்க்காணும் இனங்களுக்கான மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி திறப்பு இத்திருக்கோவில் மாவிளக்கு மண்டபத்தில் பரமக்குடி, உதவி ஆணையர் அவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் அந்த இனத்திற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள வைப்புத் தொகையை செலுத்தி கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | டெண்டர் படிவம் விலை | ரூ.500/— (திரும்பப் பெறத்தக்கதல்ல) |
| 2 | டெண்டர் படிவம் வழங்கப்படும் நாள் | 13.07.2018 முதல் 18.07.2018 காலை 10.30 மணிவரை |
| 3 | டெண்டர் கொடுக்க கடைசி நாள் | 18.07.2018 பகல் 11.30 மணிவரை |
| 4 | டெண்டர் திறப்பு நடைபெறும் நாள் | 18.07.2018 பிற்பகல் ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்கப்பட்ட பின் |
| 5 | ஏலம் நடைபெறும் நாள் | 18.07.2018 நண்பகல் 12.00 மணி |
| 6 | ஏலம்/டெண்டர் திறப்பு நடைபெறும் இடம் | திருக்கோயில் மாவிளக்கு மண்டபம் |

| வ. எண். | உரிம இனம் 1428ம் பசலிக்கு மட்டும் (ஏலம் நடைபெறும் நாள் முதல் 30.06.2019முடிய) 1 | பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி வைப்பு தொகை 2 |
|---|---|---|
| 1. | திருக்கோவிலில் பிரசாதம் விற்பனை செய்யும் உரிமம் | ரூ.10லட்சம்/— கேட்பு வரைவோலை/ வங்கி வரைவோலை/ சேமிப்பு முறி/ மாற்ற இயலாத வங்கி உத்தரவாதம் |

<u>பொது நிபந்தனைகள்</u>

1. மறு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளின் படி நடத்தப்படும். இந்த விதிகளின்படி பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பை முடிவு செய்வது அறநிலையத்துறை ஆணையர் மறுப்பாணை அதிகாரத்திற்குட்பட்டது.

2. மறு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்பவர்கள் வருமானவரித் துறையிலிருந்து வழங்கப்படும் நிரந்தர கணக்கு எண் பெற்றிருக்க வேண்டும். (PAN NUMBER) PANCARD, Adhar Card நகல் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். பொதுஏலம் ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ளும் அனைவரும் அறிவிப்பில் கண்டுள்ளபடி சால்வன்ஸி சர்டிபிகேட் வாங்கி உரிய அதிகாரியிடம் ஆஜர் செய்தும், உரிம வைப்புத் தொகை செலுத்தியும் கலந்து கொள்ள வேண்டும். மேற்படி இனங்களுக்கு தாசில்தாரிடமிருந்தும் சால்வன்ஸி சான்றிதழ் பெறப்பட வேண்டும் சால்வன்ஸி சான்றிதழ் ஆஜர் செய்யாதவர்கள்

கண்டிப்பாக பொதுஏலம்/ ஒப்பந்தபுள்ளி திறப்பு நடவடிக்கைகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். சால்வன்ஸி சான்றிழ் பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு தேதிக்கு முன் 15 நாட்களுக்குள் வில்லங்க சான்றுடன் பெற்றிருக்கப்பட வேண்டும்.

3. மறு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் அந்த இனத்திற்கு உரிய வைப்புத் தொகைக்கு **உதவி ஆணையர் / செயல் அலுவலர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில், இருக்கண்குடி** என்ற பெயரில் வரைவோலை செலுத்தி கலந்து கொள்ளவேண்டும். ஷை நடவடிக்கையின் போது சொத்து மதிப்பு சான்றிதழ் கொடுக்க இயலாமல் உள்ளவர்கள் அதற்குப் பதிலாக வைப்புத் தொகையுடன் அந்த இனத்திற்கு எதிரே குறிப்பிட்டுள்ளபடி காப்புத் தொகையினை வரைவோலை மூலம் கூடுதலாக செலுத்த வேண்டும்.

4. வைப்புத்தொகை மற்றும் காப்புத் தொகைக்கு ஒரே பணவரைவோலையாக வழங்கப்படுவது கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

5. வைப்புத்தொகை கட்டியவர்கள் மட்டுமே ஏலம் நடக்கும் இடத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

6. மேற்படி இனத்திற்கு தாக்கல் செய்யப்பட வேண்டிய சொத்து மதிப்பு சான்றிதழ் ஏலதாரர் பெயரால் எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும். பவர் ஏஜெண்டின் சொத்து மதிப்பு ஏலதாரருக்கு செல்லாது.

7. மேற்படி இனத்திற்கு உரிமம் உறுதி செய்யப்பட்டால் மேற்படியார் செலுத்தியுள்ள வைப்புத் தொகையில் உரிமத் தொகை முழுவதும் ஈடு செய்து கொள்ளப்படும். மீதித் தொகையை அதே இடத்தில் உடனடியாக ரொக்கமாக செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். தவறினால் உரிமம் ரத்து செய்யப்பட்டு வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதில் திருக்கோவிலுக்கு ஏற்படும் செலவினங்கள் மற்றும் இழப்பு தொகைக்கு மேற்படி ஏலதாரரே பொறுப்பாக்கப்படுவார்.

8. ஏல கேள்விகள் ரூ.1000/—க்கு குறையாமலும் இருக்க வேண்டும்.

9. மறு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி உரிமம் ஜாரியாகாதவர்களுக்கு முன் வைப்புத் தொகை மற்றும் சால்வன்ஸி சான்றிதழ் அல்லது காப்புத்தொகை பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை முடிந்தவுடன் திரும்ப கொடுக்கப்படும்.

10. உரிம காலம் ஆரம்பிப்பதற்கு முன் காரணம் எதுவும் சொல்லாமல் நிபந்தனைகளைக் கூட்டவும் குறைக்கவும் அல்லது மாறுதல் செய்யவும் திருக்கோவில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

11. காரணம் கூறாமல் பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையை நிறுத்தி வைக்கவோ அல்ஷது ஒத்தி வைக்கவோ நிர்வாகிகளுக்கு உரிமையுண்டு.

12. உரிமம் ஜாரி பெற்றவர் ரூ.100/— மதிப்புள்ள முத்திரை காகிதத்தில் உரிமச்சீட்டு உறுதி பெற்ற அதே தேதியில் எழுதிக் கொடுக்க வேண்டும். உரிமச் சீட்டு எழுதிக் கொடுக்காவிட்டால் சம்பந்தப்பட்ட உரிமம் அனுபவிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். தேவையெனில் தமது பொறுப்பில் ரிஜிஸ்டர் செய்து கொடுக்க வேண்டும்.

13. மறு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் நியாயமான தொகைக்கு கேட்கவில்லை என்றாலோ அல்லது கூட்டு சேர்ந்து கொண்டு கேட்பதாக திருக்கோயில் நிர்வாகம் கருதினாலோ பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க கோயில் நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு. இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

14. உரிமம் உறுதி பெற்றவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் அவ்வுரிமையை மாற்றம் (டிரான்ஸ்பர்) செய்யவோ அல்லது பினாமியாக நடத்தவோ உரிமை கிடையாது மேலும் தன் விருப்பப்படி உரிமத்திலிருந்து விடுபடவும் உரிமையில்லை.

15. மறு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் முழு விபரங்களும் நிபந்தனைகளும் தெரிந்தே கலந்து கொண்டதாக கருதப்படுவார்கள். நடவடிக்கை முடிவு செய்த பின்பு கூறும் எவ்வித ஆலோசனைகளும்/ ஆட்சேபனைகளும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

16. உரிமம் இனத்திற்கு விற்பனை வரி மற்றும் ஏதேனும் அரசு வரிகள் செலுத்த வேண்டி இருந்தால் உரிமைதாரர் அவரது சொந்தப் பொறுப்பில் ஷை வரிகளைச் செலுத்திக் கொள்ள வேண்டும். ஷை வரிகள் சம்பந்தமாக இத்திருக்கோவிலுக்கு யாதொரு சம்பந்தமும் கிடையாது.

17. உரிமம்பெற்ற குத்தகைதாரர் உரிமத்தொகையுடன் 2.3% வருமான வரியினையும் திருக்கோவிலுக்குச் செலுத்தவேண்டும்.

18. வருமானவரி பிரிவு 206Cல் வருமானவரி கட்டாயம் செலுத்தவேண்டிய இனத்திற்கு ஏலதாரர் அதில் கூறியுள்ள நிபந்தனைகளின்படி வருமானவரி செலுத்தவேண்டும். இல்லையெனில் வருமானவரி செலுத்த மேற்படி பிரிவின் கீழ் ஏலதாரர் பொறுப்பு இல்லை என்பதற்கு வருமானத் துறையிலிருந்து வழங்கப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யவேண்டும். இதில் ஏற்படும் தாவாக்கள் அனைத்திற்கும் ஏலதாரரே முழுப்பொறுப்பேற்கவேண்டும்.

19. குறிப்பிட்ட .காலத்திற்கு மட்டுமே உரிமம் விடப்படுவதால் உரிமம் காலம் முடிந்தவுடன் உரிமம் சொத்து தாமாகவே திருக்கோவில் சுவாதீனத்திற்கு வந்து விடும்.

20. திருக்கோவிலிருந்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டண விகிதங்களை பொது மக்களுக்கும் சேவார்த்திகளுக்கும் நன்கு தெரியும் விதத்தில் உரிமைதாரர் தன் சொந்த பொறுப்பில் பெரிய எழுத்தில் அறிவிப்பு பலகை எழுதி வைக்க வேண்டும். உரிமம் பெற்றவர் நடத்தும் ஏல இனத்தை இத்திருக்கோவில் நடத்துவது போன்ற எண்ணம் பொதுமக்களிடையே உண்டாகும்படி திருக்கோவில் பெயரில் விளம்பரப் பலகைகள் வைக்க கூடாது. உரிமைதாரர் பெயரில் மட்டும் தான் விளம்பர பலகைகள் எழுதி வைக்க வேண்டும்.

21. போட்டியின் காரணமாக உரிமத் தொகையை உயர்த்தி கேட்டதற்காக திருக்கோவிலில் இருந்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டண விகிதங்களை விட யாரிடமிருந்தும் எந்த சந்தர்ப்பத்திலும் கண்டிப்பாக நிர்பந்தப்படுத்தி கூடுதலாக கட்டணம் வசூல் செய்யக்கூடாது. அவ்வாறு வசூலித்தால் மறு அறிவிப்பின்றி உரிமம் ரத்து செய்யப்படும்.

22. மறு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளியின் மூலம் உரிமை கோருபவர் இந்து சமயத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும். தொற்று நோய், மனநிலை பாதிக்கப்பட்டவராக இருக்கக்கூடாது.

23. திருக்கோவில் நலனுக்கு எதிராக செயல்பட்டவர்களும், செயல்படுவதாக கருதப்படுபவர்களும், முன் பாக்கி வைத்திருப்பவர்களும், திருக்கோயிலை எதிர்த்து வழக்காடியுள்ளவர்கள், வழக்காடுபவர்கள் முதலானோர் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

24. போட்டியின் காரணமாக உயர்ந்த தொகை கேட்டதற்காக பொருட்களின் எடை மற்றும் தரத்தை குறைக்கக் கூடாது. மேலும் விலையையும் உயர்த்தக் கூடாது. அவ்வாறு புகார்கள் வருமானால் உரிமம் ரத்து செய்யப்பட்டு ஷை இனம் பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு மூலம் விடப்படும்.

25. உரிமம் பெற்றவர்களுக்கு இராஜீயம் தெய்வீகம் ஆகியவற்றால் ஏற்படும் இழப்புகளுக்கு நிர்வாகம் பொறுப்பு ஏற்க இயலாது.

26. பினாமி பெயரால் உரிமம் கேட்பதாக தெரியவந்தாலோ, முன்பாக்கி உள்ளவர்கள் உறவினர் பெயரால் உரிமம் கேட்க முன் வந்தாலோ ஷை நபர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை முடிவு செய்த பின்பு முன் பாக்கியுள்ளவர்கள் கலந்து கொண்டதாக தெரியவந்தால் உரிமம் ரத்து செய்யப்படும். பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்களை எவ்வித காரணமும் கூறாமல் தடுத்து நிறுத்த நிர்வாகத்தினருக்கு உரிமையுண்டு.

27. மறு பொதுஏலம்/டெண்டர் திறப்பு மூலம் உரிமம் பெற்றவர்களும் ஒதுக்கீடு செய்யப்படும் கட்டிடம் முதலானவற்றிற்கு திருக்கோவிலிலிருந்து நிர்ணயம் செய்யப்படும் வாடகை தொகையையும் செலுத்த வேண்டும்.

28. உரிமம் பெற்றவர்கள் தனக்கு வழங்கப்படும் பொருட்களை தவிர இதர உரிமம் பெற்றவர்களின் உரிமப் பொருட்களை கண்டிப்பாக விற்பனை செய்யக்கூடாது. அப்படி விற்பனை செய்தால் அவர்களது உரிமம் ரத்து செய்யப்படும்.

29. நிர்வாகத்தினரின் எழுத்து மூலமான உத்தரவில்லாமல் உரிமையை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது வேறு நபருக்கு உள்குத்தகைக்கு விடவோ கூடாது.

30. திருக்கோவில் நலன் கருதி உரிமம் பெற்றவர்களுக்கு ஏலம் விட்ட இடத்திற்கு பதிலாக வேறு மாற்று இடம் கொடுக்க நிர்வாகத்தினருக்கு உரிமையுண்டு. இதை ஆட்சேபிக்க உரிமம் பெற்றவர்களுக்கோ அல்லது வேறு யாருக்கும் உரிமை கிடையாது.

31. உரிமைதாரர் உரிம காலத்தில் இறந்து போனால் வாரிசுகளோ அல்லது அட்மினிஸ்ரேட்டர்களோ நிபந்தனைகளை நிறைவேற்ற கடமைப்பட்டவராவர். ஆனால் உரிமத்தினை நிர்வாகத்தினர் முடிவு செய்ய நினைத்தால் வாரிசுதாரர்கட்கு உரிமம் பாத்தியதை இல்லை. புதிய நடவடிக்கை மேற்கொண்டு வேறு நபருக்கு உறுதி செய்ய நிர்வாகத்தினருக்கு உரிமையுண்டு.

32. திருக்கோவில் அபிவிருத்தியை கருதி கட்டிடங்கள் மாறுதல், அபிவிருத்தி பணிகள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் உரிமம் காலத்தை ரத்து செய்து கட்டிடத்தை திரும்ப எடுத்துக் கொள்ள திருக்கோவிலுக்கு அதிகாரம் உண்டு. இதில் உரிமதாரர் ஏதும் நஷ்ட ஈடு கோர உரிமை இல்லை.

33. உரிமைதாரர் அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திருக்கோவில் கட்டிடங்களில் திருக்கோயில் அனுமதியின்றி எவ்வித மாற்றங்களும் அல்லது மராமத்து வேலைகளும் செய்யக் கூடாது.

34. உரிமைதாரர்கள் தங்கள் பொறுப்பிலுள்ள பொருட்களுக்கு தீ விபத்து மற்றும் இதர இயற்கை பாதிப்பிலிருந்து விடுபட தமது சொந்த பொறுப்பிலேயே இன்சூரன்ஸ் செய்திருக்க வேண்டும். அப்படி இன்சூரன்ஸ் செய்யாத பட்சத்தில் திருக்கோவிலிருந்து நஷ்ட ஈடும் கோரவும் கூடாது, அது வழங்கடப்படவும் மாட்டாது. கடைகள் மற்றும் இதர கட்டிடங்கள் தீ மற்றும் இயற்கை பாதிப்புகளுக்கு உள்ளானால் திருக்கோவில் நிர்வாகம் பொறுப்பு ஏற்க மாட்டாது. மேலும் தேவையான 'தீ' தடுப்பு சாதனங்களை தமது சொந்த பொறுப்பில் வாங்கி வைக்க வேண்டும்.

35. இதர நிபந்தனைகள் ஏதுமிருந்தால் அதை ஏலத்தின்போது அறிவிக்கப்படும்.

## பிரசாதம் விற்பனை செய்யும் உரிமம்

36. தினசரி தயாரிக்கும் பிரசாதங்களை பாதுகாப்பான முறையில் சுகாதார முறைப்படி தயார் செய்து விற்பனை செய்ய வேண்டும்.

37. பிரசாதம் தயாரிப்பவர் மற்றும் விற்பனை செய்யும் பணியாளர்கள் இந்து மதத்தை சேர்ந்தவர்களாகவும், ஆரோக்கியமானவர்களாகவும், ஒழுக்கமானவர்–களாகவும், சுத்தமானவர்களாகவும் இருக்க வேண்டும்.

38. பிரசாதங்கள் சுத்தமான கலப்படமில்லாத தரமான பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட வேண்டும்.

39. பிரசாதங்களின் எடையுடன் கூடிய விலைப்பட்டியலை எல்லோர் பார்வைக்கும் தெரியும் இடத்தில் வைக்க வேண்டும். பிரசாதங்களை தயாரிக்கும் இடத்திற்கும், விற்பனை செய்யப்படும் இடத்திற்கும் தனிமீட்டர் வைத்து மாநில மின்வாரியம் வணிகக் கடைகளுக்கு வசூல் செய்யும் மின்கட்டணம் திருக்கோயிலில் இருந்து வசூல் செய்யப்படும். பிரசாதம் விற்பனை செய்யப்படும் இடம் மற்றும் தயாரிக்கும் இடம், அவற்றின் விஸ்தீரணத்தை திருக்கோயில் நிர்வாகமே முடிவு செய்யும். திருக்கோயில் நலன் கருதி ஷை இடங்களை எந்த நேரத்திலும் மாற்றிக் கொடுக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமையுண்டு. ஷை பயன்பாட்டு இடங்களுக்கு திருக்கோயில் நிர்வாகம் நிர்ணயிக்கும் வாடகையைச் செலுத்த வேண்டும்.

40. பிரசாதங்கள் தயாரிக்கப்படுவதையும், விற்பனை செய்யப்படுவதையும் கண்காணிக்க ஆலய நிர்வாகத்தினருக்கு அதிகாரம் உண்டு. பொதுமக்களிடம் இருந்து புகார் ஏதும் ஏற்படாவண்ணம் எல்லா ஏற்பாடுகளையும் ஏலம் எடுப்பவர் செய்து கொள்ள வேண்டும்.

41. பிரசாதம் தயார் செய்ய சுத்தமான பாத்திரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

42. ஏலதாரர்/ டெண்டர்தாரர் அறிவிப்பில் கண்ட பிரசாதங்களை தவிர வேறு பிரசாதங்கள் தயாரித்து விற்பனை செய்யக் கூடாது.

43. ஒவ்வொரு நாளும் விற்பனை செய்யப்படும் பிரசாதங்களில் இருசெட் பிரசாதத்தை அம்மனுக்கு படைப்பதற்காகவும் அதன் தரத்தை சோதித்து அறிவதற்காகவும் திருக்கோவில் அலுவலகத்தில் இலவசமாக கொடுக்க வேண்டும்.

44. பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி திறப்பில் பிரசாதம் தயாரிக்கும் உரிமம் பெற்றவர்கள் தன் சொந்தப் பொறுப்பில் உணவு பாதுகாப்பு துறையில் (FSSAI) பதிவு செய்து கொள்ள வேண்டும்.

45. கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரசாதங்களுக்கு பிரசாதம் தயாரிக்கும் நாள் (Manufacturing Date) மற்றும் காலாவதி (Expire date) தேதி விபரங்கள் பிரசாத கவரில் அச்சிட்டு விற்பனை செய்ய வேண்டும்.

46. ஆணையர் சுற்றறிக்கை ந.க.எண்.10163/2016 யு1 நாள்: 07.03.2016ன்படி பிரசாத இனங்களுக்கு எடை மற்றும் விலை நிர்ணயம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் கீழ்க்கண்ட பட்டியல்படி பிரசாதங்கள் தயார் செய்து விற்பனை செய்யப்பட வேண்டும். பட்டியலில் அல்லாத பிரசாதங்கள் தயாரித்து விற்பனை செய்யக் கூடாது.

**திருக்கோயில் பிரசாதங்களின் சீரான விலை நிர்ணயம்**

| வ.எண். | பிரசாத இனங்கள் | எடை | சீரான விலை |
|---|---|---|---|
| 1. | லட்டு | 50 கிராம் | 10.00 |
| | | 100 கிராம் | 20.00 |
| 2. | அதிரசம் | 50 கிராம் | 10.00 |
| | | 100 கிராம் | 20.00 |
| 3. | தேன்குழல் | 50 கிராம் | 10.00 |
| 4. | முறுக்கு | 50 கிராம் | 10.00 |
| 5. | சர்க்கரை பொங்கல் | 100 கிராம் | 10.00 |
| 6. | புளிசாதம் | 100 கிராம் | 10.00 |
| 7. | மிளகுவடை | 50 கிராம் | 10.00 |
| 8. | கற்கண்டு | 50 கிராம் | 7.50 |
| | | 100 கிராம் | 15.00 |
| 9. | பஞ்சாமிர்தம் | 500 கிராம் | 35.00 |
| 10. | வாசனை விபூதி | 50 கிராம் | 7.50 |
| | | 100 கிராம் | 15.00 |
| 11. | மஞ்சள் மற்றும் மஞ்சள் கயிறு, குங்குமம் | 1 பாக்கெட் | 10.00 |
| 12. | மிளகு தட்டை | 50 கிராம் | 10.00 |
| 13. | பேரிச்சம்பழம் | 100 கிராம் | 10.00 |
| | | 200 கிராம் | 20.00 |
| 14. | புட்டமுது | 50 கிராம் | 10.00 |
| | | 150 கிராம் | 30.00 |
| 15. | வெண்பொங்கல் | 100 கிராம் | 10.00 |
| 16. | தயிர்சாதம் | 100 கிராம் | 10.00 |
| 17. | மஞ்சள், குங்குமம் | 50 கிராம் | 10.00 |
| 18. | சந்தனம் | 50 கிராம் | 15.00 |
| 19. | பிரசாத செட்1<br>(லட்டு1, தேன்குழல்1, அதிரசம்1, கற்கண்டு பாக்கெட்1(50 கிராம், பேரிச்சம்பழம் பாக்கெட்1(100கிராம்) | 1 பாக்கெட் | 50.00 |
| 20. | அப்பம் | 50 கிராம் | 10.00 |
| 21. | திருமாங்கல் பிரசாதம் சுவாமி படம் | | 30.00 |
| 22. | தினை மாவு | 50 கிராம் | 10.00 |
| 23. | தினை மாவு | 150 கிராம் | 25.00 |

திருமதி.ஜி.செல்வி, பி.ஏ.பி.எல்.,
உதவி ஆணையர்/ செயல் அலுவலர்(கூ.பொ.)
மற்றும்
பரம்பரை அறங்காவலர்கள்.

**website : www.irukkangudimariamman.tnhrce.in**
**email : irrukangudimariamman@tnhrce.org**
**Phone No. 04562 – 259669, 9442644748**